


IPL
புலமை மையம்

தரம் 05

நேரம் :- 1 மணித்தியாலம்	வினாத்தாள் - 01 பகுதி - I	ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி 0756584350, 0740769151
சுட்டெண் :		

01ம், 02ம் வினாக்களில முதலில் தரப்பட்ட உருவுடன் மிக நெருங்கிய தொடர்பினை காட்டும் உருவைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

01.  I.  II.  III. 

02.  I.  II.  III. 

03, 04ம் வினாக்களில் சோடிச் சொற்களுக்கு பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

03. மழை, வெயில் I.  II.  III. 

04. பயணம், சொகுசு I.  II.  III. 

கீழே தரப்பட்டுள்ள உருக்களைக் கொண்டு 05, 06ம் வினாக்களுக்கு விடை தருக.


A.  **B.**  **C.**  **D.**  **E.**  **F.** 

05. ஒன்றினது பயன்பாட்டிற்கு இன்னொன்று அவசியமாகும் அவ் விரண்டையும் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் எவை?

I. A, F II. F, C III. C, E

06. ஒரே வகைக்குள் உள்ளடங்கக் கூடிய இரண்டினதும் ஆங்கில எழுத்து எவை?

I. F, E II. B, C III. A, C

07. 

எல்லாப் பக்கங்களும் நீளத்தில் சமனான முக்கோணி ஒன்று கம்பியினால் அமைக்கப்பட்டுள்ளது. இதனை விரித்து ஒரு சதுரமாக அமைக்கும் போது பெறப்படும் சதுரத்தின் பரப்பளவு யாதாகும்.

I. $64cm^2$ II. $36cm^2$ III. $49cm^2$

www.ipledu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

08. குறித்த வரிசையொன்றில் நடுவில் நிற்கும் கமலனுக்கு அடுத்ததாக முன்னால் நிற்கும் சிவாவின் பின்னால் 08 பேர் நின்றனர் எனின் அவ்வரிசையில் உள்ளோரின் எண்ணிக்கை யாது?

I. 17 பேர் II. 13 பேர் III. 15 பேர்

09. 540யின் அரை மடங்குடன் 150யின் இருமடங்கை கூட்ட வரும் எண்ணானது எவ்வெண்ணின் அரைவாசியாகும்.

I. 285 II. 1140 III. 900

10.  அருகில் உருவில் நிழற்றப்பட்ட பகுதியானது எத்தனை கட்டங்களிற்கு சமனாகும்.

I. 06 II. 04 III. 05

11. கிரிக்கெட் போட்டி ஒன்றின் முடிவில் ஓர் அணி வீரர்கள் தங்களுக்கு இடையேயும் இரு நடுவர்களுடனும் கைகுலுக்கி கொண்டனர் எனின் அங்கு எத்தனை கைகுலுக்கள்கள் இடம் பெற்றிருக்கும்

I. 78 II. 77 III. 83

12. ஏதேனும் ஒரு நிகழ்விற்கு காரணம் இல்லாத வாக்கியத்தை தெரிவு செய்க.

I. சேவல் கூவியதும் விவசாயிகள் வயலுக்கு செல்ல தயாராகினர்.
II. நாய் குரைத்தால் திருடன் தப்பி ஓடினான்.
III. சூரியகாந்தி காலையில் மலர்ந்தது.

13. வித்தியா உண்டியலில் பணம் இடும் போது தான் முதல் நாள் இட்ட பணத்தைப் போல் மூன்று மடங்கு பணத்தை அடுத்த நாளில் இடுகிறாள் எனில் வித்தியா 03ம் நாளில் உண்டியலில் ரூபா 36.00 ஐ இடுகிறாள் எனின் முதலாம் நாள் எவ்வளவு பணத்தினை இட்டிருப்பாள்.


I ரூ. 12.00 II. ரூ. 04.00 III. ரூ. 09.00

14. அவள் முதல் நாளில் ரூ. 03.00 இடுகிறாள் எனின் நான்காம் நாள் பணம் இட்ட பின்னர் உண்டியலில் காணப்படும் மொத்தப் பணம் எவ்வளவு?

I. ரூ. 120.00 II. ரூ. 81.00 III. ரூ. 100.00

15. சாதாரண முட்கடிகாரம் ஒன்று ஒரு மணிக்கு ஒரு தடவையும் இரண்டு மணிக்கு இரண்டு தடவையும் என்ற வகையில் ஒலிக்கிறது. எனவே ஒரு நாளில் அது எத்தனை தடவைகள் ஒலிக்கும்?

I. 300 II. 156 III. 78

16.  அருகில் தரப்பட்டுள்ள அமைப்பில் காணப்படும் சதுரங்கள் மற்றும் முக்கோணிகளின் எண்ணிக்கை முறையே யாது?

I. 05, 06 II. 04, 06 III. 05, 08

www.ikedu.lk

கீழே தரப்பட்டுள்ள கணிதச் செய்கையை அவதானித்து 17, 18ம் வினாக்களுக்கு விடை தருக.

M + M = 24 R - 5 = M R + M = T

17. பின்வருவனவற்றுள் R யின் பெறுமானம் எதுவாகும்


I. 20 II. 17 III. 25

18. இவற்றுள் பெறுமானம் கூடிய எழுத்திற்கும் பெறுமானம் குறைந்த எழுத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

I. 17 II. 15 III. 08

19, 20ம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண்கோலங்கள் விளங்கி வெற்றிடத்தில் வர வேண்டிய விடையை தெரிவு செய்க.

19.



I. A = 40, B = 12 II. A = 36, B = 26 III. A = 20, B = 12

20. 02, 05, 12, 25, _____

I. 49 II. 47 III. 52

21. வட்ட வடிவான மைதானம் ஒன்றின் சுற்றளவு 85m ஆகும். அம் மைதானத்தை சுற்றி 5m இடைவெளியில் கம்பங்கள் நட வேண்டுமாயின் சுற்றிவர நடுவதற்கு எத்தனை தூண்கள் தேவை?

I. 18 II. 16 III. 17

22.



ஒரேயளவான சிறிய செவ்வக வடிவான அட்டைகள் நான்கினால் இவ்வுரு ஆக்கப்பட்டுள்ளது. ஒரு செவ்வக வடிவான அட்டையின் அகலம் 3cm எனின் இவ்வுருவின் சுற்றளவு யாது?

I. 38cm II. 42cm III. 36cm

கீழ்வரும் பாடலடியை கொண்டு 23, 24ம் வினாக்களுக்கு விடை தருக.

பாம்பை கண்டால் நடுங்கிடுமே, பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே
வீம்பாய் கத்தி கெட்டிடுமே, விரோதி கண்ணில் பட்டிடுமே

23. பாடலில் விபரிக்கப்படும் பிராணி எது?

I. பாம்பு II. தவளை III. பல்லி

www.ikedu.lk

24. பாடலில் விபரிக்கப்படும் பிராணியின் எதிரி யாது?

I. பாம்பு II. கீரி III. எலி

கீழ்வரும் தகவலைக் கொண்டு 25 , 26ம் வினாக்களுக்கு விடை தருக.

ரவி, மாலா, விதுரன், சேகர், சித்ரா ஆகிய ஐந்து மாணவர்கள் வரிசை ஒன்றில் நிற்கின்றனர்.

- ❖ வரிசையின் நடுவில் ரவி ஆவார்
- ❖ இரு ஆண்கள் அருகருகே நிற்பதில்லை
- ❖ விதுரனில் இருந்து சித்ரா நான்காவதாக நிற்கிறாள் எனின்

25. வரிசையில் இரண்டாவதாக நிற்பவர் யார்?

I. மாலா II. சேகர் III. சித்ரா

26. வரிசையில் இறுதியில் மற்றும் ஆரம்பத்தில் நிற்போர் முறையே யாவர்?

I. விதுரன், சேகர் II. சேகர், சித்ரா III. சேகர், விதுரன்

27. 31 நாட்களையுடைய மாதம் ஒன்றில் 3வது புதன்கிழமை 20ம் திகதி எனின் அம்மாததில் வரக்கூடிய சனிக்கிழமைகளின் திகதிகளின் மொத்தத்திற்கு இருக்க கூடிய உயர்ந்தபட்ச பெறுமானம் யாது?

I. 80 II. 85 III. 75

28. ○ x ○ x ○ = □

□ + △ = ▭

▭ ÷ 2 = 20 எனின் ▭ + □ + △ + ○ யின் பெறுமானம் யாது?

I. 60 II. 83 III. 91

29. 01 தொடக்கம் 06 வரை இலக்கம் இடப்பட்டுள்ள ஓர் ஒழுங்கான தாயக்கட்டையின் இலக்கம் 03யின் அயற்பக்கங்களில் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

I. 17 II. 09 III. 14

30. விவசாயி – வயல் எனின்

I. மீனவன் - வலை II. மாணவன் - பாடசாலை III. வீரன் - பதக்கம்


31. 20ம் நூற்றாண்டின் 04ம் தசாப்தத்திற்குரிய ஆண்டாக அமையாதது யாது?

I. 1939 II. 1941 III. 1933

www.lkedu.lk

32. VI தொடக்கம் XVI வரையான உரோம எண்குறிகளை எழுதும் போது I எனும் எண்குறி எத்தனை தடவைகள் எழுதப்படும்

I. 15 II. 14 III. 17

33. 

அருகில் உள்ள வரிப்படமானது இலங்கை ஊவா, சப்ரகமுவ, பதுளை ஆகியவற்றை குறிக்கின்றது எனில் பதுளையை குறிக்கும் ஆங்கில எழுத்து எது?

I. C II. D III. B

குமரனிடம் குறித்த எண்ணிக்கையில் சில பந்துகள் காணப்பட்டன. அதில் 03 ஐ தவிர்த்து ஏனையவை மஞ்சள் நிற பந்துகள் ஆகும். 04 ஐ தவிர்த்து ஏனையவை சிவப்பு நிற பந்துகள் ஆகும். 05 ஐ தவிர்ந்த ஏனையவை பச்சை நிற பந்துகள் ஆகும்

34. குமரனிடம் காணப்படும் சிவப்பு நிறப்பந்துகளின் எண்ணிக்கை யாது?

I. 02 II. 03 III. 04

35. குமரனிடம் காணப்படும் மஞ்சள் மற்றும் பச்சை நிறப்பந்துகளின் எண்ணிக்கை யாது?

I. 05 II. 03 III. 04

36. 25 வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஒன்றில் சரியான ஒவ்வொரு வினாவிற்கும் 04 புள்ளிகள் வழங்கப்படுவதோடு பிழையான ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு புள்ளி குறைக்கப்படும். மோகன் இவ்வினாத்தாளில் 60 புள்ளிகள் பெற்றான் எனின் மோகன் சரியாக விடை அளித்த வினாக்களின் எண்ணிக்கை யாது?


I. 21 II. 19 III. 17

37. சாதாரண வருடத்தில் வரக்கூடிய மாதம் ஒன்றின் நடுவில் வரும் நாள் வியாழக்கிழமை எனில் அதற்கடுத்த மாதத்தின் முதலாம் திகதி என்ன நாளில் வரும்.

I. வியாழக்கிழமை II. சனிக்கிழமை III. திங்கட்கிழமை

38. கவிதா ஒரு பெண் பிள்ளையாவாள். அவளின் தம்பிக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் காணப்படுகின்றனர் எனின் கவிதாவின் பெற்றோருக்கு எத்தனை பிள்ளைகள் காணப்படுவர்.

I. 05 பிள்ளைகள் II. 03 பிள்ளளைகள் III. 04 பிள்ளைகள்

39. 

செவ்வக வடிவ மைதானம் ஒன்றினுள் பிள்ளை ஒன்று P யிலிருந்து Q வரை பயணித்த பாதை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி இப்பிள்ளை தெற்கு திசையை விட கிழக்கு திசையாக அதிகமாக பயணித்த தூரம் யாது?

I. 12m II. 04m III. 06m

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

40.



அருகில் நகரம் A யிலிருந்து நகரம் B வரைக்குமான தூரம் 25km ஆகும். நகரம் A யில் இருந்து குமார் மணித்தியாலத்திற்கு 2km எனும் வேகத்தில் நகரம் B ஐ நோக்கியும், நகரம் B யில் இருந்து மணித்தியாலத்திற்கு 3km எனும் வேகத்தில் நாதன் நகரம் A ஐ நோக்கியும் பயணிக்கின்றனர். இருவரும் மு.ப. 07.00 மணிக்கு பயணத்தை ஒன்றாக ஆரம்பித்தனர் எனின் இருவரும் எத்தனை மணிக்கு ஒருவரை ஒருவர் சந்திப்பர்.

I. நண்பகல் 12.00 II. மு.ப. 11.30 III. பி.ப. 1.00

www.lkedu.lk

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

IPL
புலமை மையம்

தரம் 05

நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடம்	வினாத்தாள் - 01	ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி
சுட்டெண் :	பகுதி - II	0756584350, 0740769151

01. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.

இது இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் உள்ள ஒரு புராதன நகரமாகும். கி.பி. 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை பண்டைய இலங்கையின் தலைநகராக விளங்கியது. இது இரண்டாவது புராதன இலங்கையின் இராச்சியமாகும். சோழர் இலங்கையை ஆண்ட காலத்தில் இதனை தலைநகராக்கி இருந்தனர். பின்னர் இந்நகரம் முதலாம் விஜயபாகு மன்னன் காலத்திலும் இலங்கையின் தலைநகராக விளங்கியது. இது வட மத்திய மாகாணத்தின் இரண்டாவது பெரிய நகரமும் அழகிய நகரமும் ஆகும். இங்கு பசுமையான சூழலும் புராதன கட்டிடங்களும், பராக்கிரம சமுத்திரம் எனப்படும் பெரிய குளமும் காணப்படுகின்றது.

I. பந்தியில் விபரிக்கப்படுவது எந்நகரத்தினை ஆகும்? .....
II. இந்நகரம் அமையப் பெற்றுள்ள மாகாணம் எது? .....
III. இராசதானி என்பதற்கு பதிலாக பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது? .....
IV. பொய்கை எனும் சொல்லின் ஒத்த கருத்துச் சொல் எது? .....
V. 'தலைநகராக்கியிருந்தனர்' எனும் சொல்லைப் பிரித்தெழுதினால் வருவது? .....
VI. இந்நகரத்தில் அமையப்பெற்றுள்ள விடயங்கள் 2 தருக. .....

(6புள்ளிகள்)

02. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

I. பறவைகள் கூட்டம் கூட்டமாக பறந்து சென்றது (.....)
II. நதிக்கரையில் மான்கள் நீர் அருந்தின (.....)
III. முகிற்கூட்டம் திரள்திரளாக காணப்பட்டது (.....)

(3புள்ளிகள்)

03. பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் தனிச்சொல்லை எழுதுக.

I. மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன்? .....
II. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை? .....
III. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது? .....

(3புள்ளிகள்)

04. கீழ்வரும் சொற்களில் உள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை எழுதுக.

I. மீன் - .....
II. பொன் - .....

(2புள்ளிகள்)

www.ipledu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

05. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லை தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(கற்கள், சித்தப்பா, புறா, நீங்கள், நான்)

I. உயர்திணை படர்க்கைப் பெயர்ச் சொல்? .....

II. அ.்றினை பன்மை பெயர்ச்சொல்? .....

(2புள்ளிகள்)

06. பின்வரும் பழமொழிகளின் கருத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

I. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் - .....

II. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து - .....

(2புள்ளிகள்)

07. பின்வருவனவற்றின் ஒலி மரபுச் சொற்களை எழுதுக.

I. நரி - ..... II. கோழி - .....

(2புள்ளிகள்)

08. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.

I. கரும்பலகை - ..... II. வெற்றிலை - .....

(2புள்ளிகள்)

09. கீழ்வரும் வாக்கியங்களை வினா வாக்கியமாக மாற்றி எழுதுக.

I. எடிசன் பாடசாலைக் காலத்தில் திறமையற்றவனாக இருந்தான்

.....

II. அலுமாரியில் புத்தகங்கள் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

.....

(2புள்ளிகள்)

10. பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(கவனமாக இருத்தல், எதிர்த்துப் பேசுதல், அறிவு உண்டாதல், நித்திரை செய்தல்)

I. கண் திறத்தல் - ..... II. கண்ணாயிருத்தல் - .....

(2புள்ளிகள்)

11. தரப்பட்டுள்ள படங்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.

I.  - ..... II.  - .....

(2புள்ளிகள்)

12. பின்வரும் வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

I. Silence please - .....

II. Happy New year - .....

(2புள்ளிகள்)

13. பின்வரும் வாக்கியத்தின் சிங்கள உச்சரிப்பை தமிழில் எழுதுக.

நான் பாடம் படிக்கிறேன் - .....

(2புள்ளிகள்)

14. "அப்பி செல்லங் கரன்ன யமுத?" எனும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

.....

(2புள்ளிகள்)

www.ikedu.lk


கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.

15. தரப்பட்டுள்ள எண்ணை சொற்களில் எழுதுக.
5325 - ……

16. | 3 | | 0 | | 2 | | 6 | அடைப்பில் உள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக. ……

17. தரப்பட்டுள்ள எண்களை உரோம எண்குறிகளில் எழுதுக.

I. 13 - …… II. 19 - ……..


18.  உருவில் நிழற்றப்படாத பகுதியை தசமத்தில் எழுதுக. ……..

19. எல்லா முகங்களும் ஒரே வடிவமாக உள்ள திண்ம உருக்கள் 2 தருக.
……..

20. விழா ஒன்று 4 மணித்தியாலம் 35 நிமிடங்கள் வரை நடைபெற்று பி.ப. 3.25 யிற்கு முடிவடைந்தது. எனின் விழா ஆரம்பித்த நேரம் யாது? ……...

21. ஒருவர் தன்னிடமுள்ள குறித்த தொகைப் பணத்தில் ½ பங்கை தனது தாயாருக்கும் எஞ்சியதன் அரைப்பங்கை தனது சகோதரிக்கும் கொடுத்த பின்னர் எஞ்சிய ரூபா. 8000.00 ஐ தனது சேமிப்பாக வங்கியில் வைப்பிலிட்டார் எனில் அவரிடம் ஆரம்பத்தில் இருந்த பணத்தின் பெறுமதி யாது? ……


22. ரமணி கடைக்குச் சென்று 1m 180.00 விலையுள்ள சீத்தைத்துணியில் 3m உம் 1m 220.00 விலையுள்ள சீத்தைத் துணியில் 2m 50cm உம் வாங்கினால் எனில் அவள் கடைக்காரருக்கு செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு? ……..

23. 

I. அருகில் உள்ள உருவின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன. ……..


II. இவ்வுருவின் சுற்றளவு யாது? ……...

24. ஒரு சாக்கில் 25kg 450g அரிசியும், இன்னொரு சாக்கில் 34kg 640g அரிசியும் காணப்பட்டன. இரு சாக்குகளிலும் உள்ள அரிசியின் மொத்த நிறை யாது?
……..

25. 

I. இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை கட்டங்களுக்கு சமனாகும். ……

II. நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக தருக. ……..

26.  இவ்வுருவின் எல்லாப்பக்கங்களும் நீளத்தில் சமனானவை. அதன்படி இவ்வுருவில் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது? ……..


www.ipl.lk

27. 1976, 2345, 1747, 2340, 3240, 1796, 1639

மேலுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதும் போது நடுவில் வரும் எண் எது? .....

28. கமலா வீட்டிலிருந்து நூலகத்திற்கு செல்லும் போது முறையே வடக்கு, தென்கிழக்கு, மேற்கு ஆகிய திசைகளில் பயணித்தாள் எனின் கமலா நூலகத்திலிருந்து வீடு திரும்பும் போது பயணிக்க வேண்டிய திசைகளை ஒழுங்கு முறையில் எழுதுக. .....

29. ஒரு தோட்டத்திற்கு வரும் நான்கு வகைப் பறவைகளைக் குறிப்பிடும் பூரணமற்ற வரைபு உருவில் காணப்படுகிறது.



I. தோட்டத்திற்கு வந்த மைனாக்களின் எண்ணிக்கை 35 என காணப்பட்டுள்ளது. எனவே மைனாக்களின் எண்ணிக்கையை வரைபில் உரிய நிரலில் நிழற்றிக் காட்டுக.

II. தோட்டத்திற்கு வரும் பறவைகளின் மொத்த எண்ணிக்கை யாது? .....

(15 x 2 = 30 புள்ளிகள்)

30 தொடக்கம் 59 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

30. பின்வருவனவற்றில் நீரில் நடமாடும் பறவைகள் எவை?

I. பருந்து, கழுகு II. நாரை, சேவல் III. அன்னம், நாரை

31. புல்லாங்குழல் இசைக் கருவியில் உள்ள துளைகளின் எண்ணிக்கை யாது?

I. ஏழு II. எட்டு III. ஆறு

32. காந்தம் ஒன்றை இரும்பு துண்டொன்றிற்கு அருகில் பிடித்த போது காந்தம் இரும்புத்துண்டோடு ஒட்டிக் கொண்டது. இதனைக் குறிப்பது.

I. தள்ளுதல் II. கவர்தல் III. கடத்துதல்

33. சீதேவியார் செங்கழு நீர் பரம்பலடைவது எதன் மூலமாகும்.

I. நீரின் மூலம் II. காற்றின் மூலம் III. வெடித்துச் சிதறுவதன் மூலம்

34.  அருகில் படத்தில் காட்டப்பட்டுள்ள தேசிய வீரர் யார்.

I. டி.பி. ஜாயா II. எம்.சி. சித்திலெப்பை III. பாக்கீர் மாக்கார்

35. வயலில் சூடு மிதிக்கும் இடத்தில் எதுருகளுக்கு வழங்கப்படும் பெயர் யாது?

I. குல்லம் II. பொலிக் கொடி III. பொலி நடையன்

www.ikegu.lk

36. கீழ்வரும் உருக்களில் வாகனத் தரிப்பிடத்தை குறிக்கும் வீதிக்குறியீடு எது

I.  II.  III. 

37. பின்வருவனவற்றில் எது வெந்நீரில் விரைவாக கரையக் கூடியது.

I. உப்பக்கட்டி II. வினாகிரி III. சீனி

38. கீழ்வரும் உலோகங்களில் துருப்பிடிக்கும் தன்மை கொண்டது எது?

I. அலுமினியம் II. இரும்பு III. பொன்

39. பின்வருவனவற்றில் கால்கள் அற்ற பிராணி எதுவாகும்

I. நத்தை II. நண்டு III. ஆமை

40.  அருகில் தரப்பட்டுள்ள உடுக்கோலத்தின் பெயர்

I. சிம்மம் II. பெருங்கரடி III. தென்சிலுவை

41. தென் மாகாணத்தில் கடலுடன் கலக்கும் இரு நதிகளும் எவை

I. களனி கங்கை, வளவ கங்கை II. மகாவலி, களனி கங்கை

III. நில்வள கங்கை, வளவ கங்கை

42. பின்வருவனவற்றில் வளிநிரல் கருவி வகையில் அடங்காதது

I.  II.  III. 

43. தியானப் பயிற்சியின் மூலம் கிடைக்கும் நன்மை ஒன்று அல்லாதது

I. மகிழ்ச்சியான மனநிலை II. புரிந்துணர்வற்ற செயற்பாடுகள்

III. நற்பண்புகள் வளர்ச்சியடைதல்

44. வீதிச் சமிக்ஞை விளக்கில் பயன்படுத்தப்படும் மூன்று நிறங்களும் எவை

I. சிவப்பு, பச்சை, மஞ்சள் II. பச்சை, சிவப்பு, வெள்ளை III. மஞ்சள், பச்சை, நீலம்

45. விசர்நாய்க்கடிக்கு உள்ளான ஒருவருக்கு செய்யத்தக்க முதலுதவி

I. காயத்தை துணியால் கட்டுதல்

II. கடிபட்ட இடத்தை சுத்தமான ஓடும் நீரினால் கழுவுதல்

III. கடிபட்ட இடத்தை கத்தியால் வெட்டுதல்

46. பிராணிகளின் இரத்தத்தை உணவாக கொள்ளும் விலங்கு

I. அட்டை II. சிலந்தி III. பாம்பு

47. பின்வருவனவற்றில் எது இலங்கைக்கே உரித்தான ஒரு தாவரம் அல்லாதது

I. கித்துள் II. காட்டிலுப்பை III. அன்ன முன்னா

48. இலங்கையில் அதிகமான ஆதிவாசிகள் வசிக்குமிடம்

I. திம்புலாகல II. தம்பாளை III. அநுராதபுரம்

49. இலங்கையில் நிலக்கரியை வலு சக்தியாக கொண்டு இயங்கும் மின் நிலையம்

I. நுரைச்சோலை II. விக்டோரியா III. சபுகஸ்கந்த

www.ikeduk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

50. சாய்தளத்தை பயன்படுத்தி வேலை செய்யும் சந்தர்ப்பம் ஒன்று

I. நீர்க்குழாயில் நீரைப்பெறல் II. மரங்களைப் பிளக்க ஆப்பு பயன்படல்

III. மோட்டார் சைக்கிளை செலுத்துதல்

51. 

இக்குறியீட்டை எப்பொருட்களில் அவதானிக்க முடியும்.

I. உணவுப் பொருள் II. மருந்துப் பொருள்

III. மின் இலத்திரனியல் பொருட்கள்

52. பகல் வேளைகளில் சூழலில் அவதானிக்கக் கூடிய பிராணி எது?

I. ஆந்தை II. கிளி III. வெளவால்

53. புற்றை அமைக்கும் விலங்கினம் எது?

I. பாம்பு II. ஓணான் III. கறையான்

54. எண்புருக்கு நோய் எக்குறைபாட்டினால் ஏற்படுகிறது.

I. விற்றமின் C II. விற்றமின் D III. விற்றமின் A

55. இலங்கையில் உள்ள பெருந்தெருக்களை குறிக்க பயன்படும் ஆங்கில எழுத்து எது?

I. A II. D III. B

56. இலங்கையில் உயரத்தில் இரண்டாவதாக உள்ள நீர்வீழ்ச்சி எது?

I. பம்பரகந்த II. தியலும III. விக்சபான

57. உலகில் உள்ள சமுத்திரங்களில் மிகப்பெரிய சமுத்திரம் எது?

I. பசுபிக் சமுத்திரம் II. இந்து சமுத்திரம் III. அத்திலாந்திக் சமுத்திரம்

58. 

அருகில் உள்ள கலைப்படைப்பின் பெயர்

I. சீகிரியா II. இசுறுமுனி காதலர் சிலை

III. எம்பக்க கலைப்படைப்பு

59. "புது மணத் தம்பதியினருக்கு கையில் நீர் வார்த்தல்" எனும் பழக்க வழக்கமுடைய மக்கள் யாவர்

I. சிங்களம் II. தமிழர் III. முஸ்லிம்கள்

(30x1 = 30புள்ளிகள்)

60. "எனும் வீட்டு முற்றத்தில் உள்ள அழகான பூந்தோட்டம்" எனும் தலைப்பில் 03 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 05 சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.

……..

……..

……..

……..

……..

……..

……..

(06 புள்ளிகள்)

www.ikedu.lk